சிறப்புடன் நடத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அனுமதி பெற்றுத் தருவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டது போல் *26-1-1996*-ல் கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. வேறு ஏதேனும் பணிகள் கூடுதலாக செய்யவேண்டும் என்று கருதினால், அந்தப் பணிகளும் உடனடியாக செய்து தரப்படும்.

65—

கடற்கரைச் சாலைத்திட்டம்

****82032**—திரு. எம்.கே. பாலன்:*

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மெரினா கடற்கரைப் பகுதியில் இருந்து கடற்கரை ஓரமாக மகாபலிபுரம் வரை சாலை போடும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது திட்டம் தொடங்கும்?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

(அ) இல்லை. ஆனால் கிழக்கு கடற்கரைச் சாலையை திருவான்மியூரிலிருந்து கடலூர் வரை மேம்பாடு செய்யும் திட்டம் ஆகிய வளர்ச்சி வங்கி கடன் உதவியுடன் மே *1991*-ல் துவக்கப்பட்டு செயலாக்கப்பட்டு வருகிறது.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

70—

கூட்டுறவு சங்கங்களில் துணிகள் தேக்கம்

****23543** திரு. ஓ.எஸ். அமர்நாத்:*

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையிலுள்ள திருவள்ளுவர், கிருஷ்ணாபுரம் கூட்டுறவு நெசவாளர் சங்கங்களில் உற்பத்தியாகின்ற துணிகள் தேங்கிக் கிடப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு அத்துணிகளை எடுத்துக் கொண்டு நெசவாளர்களுக்கு உரிய தொகை வழங்க ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி. இரா. இந்திரகுமாரி, சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) மதுரையில் உள்ள திருவள்ளுவர் மற்றும் கிருஷ்ணாபுரம் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் தேங்கியுள்ள துணிகளை கோ-ஆப்டெக்ஸ் கொள்முதல் செய்துள்ளது. மேலும் மேற்படி சங்கங்கள், வெளி மார்க்கெட்டில் தாங்கள் உற்பத்தி செய்த துணிகளை நேரடியாக விற்பனை செய்து வருகின்றன. இதன் காரணமாக துணிகளின் இருப்பு பெருமளவு குறைந்துள்ளது.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

(ஐந்தாம் பட்டியல்) (*)

1—

தாலுகா மருத்துவமனைகளில் ஊர்தி வசதி

வினா எண் ***41893*—திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாலுகா தலைமை மருத்துவ மனைகளில் அவசர ஊர்தி மற்றும் அமரர் ஊர்தி இல்லாத நிலை எங்கெங்கு உள்ளன?

(ஆ) அவற்றில் மேற்படி வசதிகளை ஏற்படுத்தித்தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை-

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

(அ) தற்போதயை ஊர்தி இல்லாத நிலவரம் மாவட்டம் வாரியாக இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) இல்லை

---

* குறிப்பு: இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS